ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஒருநல் சுற்றம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒருநல் சுற்றம் ॥

பல திருப்பதிகள்

‡ஒருநல் சுற்றம்⋆ எனக்குயிர் ஒண் பொருள்⋆
வருநல் தொல்கதி⋆ ஆகிய மைந்தனை⋆
நெருநல் கண்டது⋆ நீர்மலை இன்று போய்⋆
கருநெல் சூழ்⋆ கண்ண மங்கையுள் காண்டுமே (1)

‡பொன்னை மா மணியை⋆ அணி ஆர்ந்ததோர்
மின்னை⋆ வேங்கடத்துச்சியில் கண்டு போய்⋆
என்னை ஆளுடை ஈசனை⋆ எம்பிரான்
தன்னை⋆ யாம் சென்று காண்டும்⋆ தண்காவிலே (2)

வேலை ஆலிலைப்⋆ பள்ளி விரும்பிய⋆
பாலை ஆர் அமுதத்தினைப்⋆ பைந்துழாய்⋆
மாலை ஆலியில்⋆ கண்டு மகிழ்ந்து போய்⋆
ஞாலம் உன்னியைக் காண்டும்⋆ நாங்கூரிலே (3)

துளக்கமில் சுடரை⋆ அவுணன் உடல்⋆
பிளக்கும் மைந்தனைப்⋆ பேரில் வணங்கிப் போய்⋆
அளப்பில் ஆரமுதை⋆ அமரர்க்கருள்
விளக்கினை⋆ சென்று வெள்ளறைக் காண்டுமே (4)

சுடலையில்⋆ சுடு நீறன் அமர்ந்ததோர்⋆
நடலை தீர்த்தவனை⋆ நறையூர் கண்டு⋆ என்
உடலையுள் புகுந்து⋆ உள்ளம் உருக்கியுண்⋆
விடலையைச் சென்று காண்டும்⋆ மெய்யத்துளே (5)

வானை ஆர் அமுதம்⋆ தந்த வள்ளலை⋆
தேனை நீள் வயல்⋆ சேறையில் கண்டு போய்⋆
ஆனை வாட்டி அருளும்⋆ அமரர் தம்
கோனை⋆ யாம் குடந்தைச் சென்று காண்டுமே (6)

கூந்தலார் மகிழ்⋆ கோவலனாய்⋆ வெண்ணெய்
மாந்தழுந்தையில்⋆ கண்டு மகிழ்ந்து போய்⋆
பாந்தள் பாழியில்⋆ பள்ளி விரும்பிய⋆
வேந்தனைச் சென்று காண்டும்⋆ வெஃகாவுளே (7)

பத்தர் ஆவியைப்⋆ பால் மதியை⋆ அணித்
தொத்தை⋆ மாலிருஞ்சோலைத் தொழுது போய்⋆
முத்தினை மணியை⋆ மணி மாணிக்க
வித்தினை⋆ சென்று விண்ணகர் காண்டுமே (8)

கம்ப மா களிறு⋆ அஞ்சிக் கலங்க⋆ ஓர்
கொம்பு கொண்ட⋆ குரை கழல் கூத்தனை⋆
கொம்புலாம் பொழில்⋆ கோட்டியூர்க் கண்டு போய்⋆
நம்பனைச் சென்று காண்டும்⋆ நாவாயுளே (9)

‡பெற்றம் ஆளியைப்⋆ பேரில் மணாளனை⋆
கற்ற நூல்⋆ கலிகன்றி உரை செய்த⋆
சொல் திறம் இவை⋆ சொல்லிய தொண்டர்கட்கு⋆
அற்றம் இல்லை⋆ அண்டம் அவர்க்காட்சியே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖